## 11th Political Science Lesson 15 Questions in Tamil

## 15] தமிழக அரசியல் சிந்தனை

1) ஸ்டராபோ எனும் கிரேக்க வரலாற்று சிந்தனையாளர் மற்றும் புவியியலாளர் கீழ்காணும் எந்த காலத்தை சேர்ந்தவர் ஆவார்?

A) கிமு 60 முதல் கிபி 20 வரை

B) கிமு 63 முதல் கிபி 25 வரை

C) கிமு 63 முதல் கிபி 24 வரை

D) கிமு 65 முதல் கிபி 25 வரை

2) பண்டைக்கால துறைமுகங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. பூம்புகார், கொற்கை

II. வசவசமுத்திரம், பெரிமுளா

III. அரிக்கமேடு, அழகன்குளம்

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

3) கீழ்க்காணும் எந்த இடங்களில் பண்பாட்டு பரிமாற்றங்கள் நடந்தவகையாக அறியப்படுகிறது?

I. தென்கிழக்கு ஆசிய நாடுகள்

II. சீனா, எகிப்து

III. ரோமாபுரி, கிரேக்கம்

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்துடனும்

4) சங்கப் பாடலின் வகைப்பாட்டியலில் புறம் என்பது கீழ்காணும் எதைப்பற்றி கூறுவதில்லை?

A) போர்

B) நன்மை மற்றும் தீமை

C) சமூகம், நீதி, முடியரசு

D) அன்பு சார்ந்து இருத்தல்

5) கீழ்க்கண்ட நூல்களுள் எட்டுத்தொகை நூல் அல்லாதது எது?

A) பதிற்றுப்பத்து

B) கலித்தொகை

C) பரிபாடல்

D) மதுரை காஞ்சி

6) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. ஆரம்பகாலத்தில் தொல்காப்பியத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் தமிழ்க் இலக்கணமாக கருதப்பட்டது.

II. சங்க இலக்கியங்களுக்கு பிறகு சேகரிக்கப்பட்ட பிரபலமான நூற்கோவை அல்லது பாடல் திரட்டு என்பது கீழ்க்கணக்கு என அழைக்கப்படுகிறது.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

7) திருக்குறள் கீழ்கண்டவற்றில் எதனின் கீழ் அமைந்துள்ளது?

A) ஐம்பெரும் காப்பியம்

B) ஐஞ்சிறு காப்பியம்

C) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

D) பதினெண்மேல்கணக்கு நூல்கள்

8) கிமு 165இல் வாழ்ந்த காரவேலா என்பவர் யார்?

A) சோழ அரசன்

B) பாண்டிய அரசன்

C) கலிங்க அரசன்

D) பல்லவ அரசன்

9) தமிழ் அரசர்களின் கூட்டமைவின் பிறநாட்டு படையெடுப்பிற்கு எதிராக சண்டையிட்டதை கூறும் சங்ககால இலக்கிய நூல் எது?

A) அகநானூறு

B) புறநானூறு

C) பரிபாடல்

D) கலித்தொகை

10) கோவலன் மற்றும் கண்ணகியின் வாழ்ந்த இடமாக அறியப்படுவது எது?

A) கொற்கை

B) பூம்புகார்

C) மதுரை

D) மாமல்லபுரம்

11) பொருத்துக

I. குறிஞ்சி – a) காடுகளை சார்ந்த பகுதி

II. முல்லை – b) வயல் சார்ந்த பகுதி

III. மருதம் – c) மலைசார்ந்த பகுதி

IV. நெய்தல் – d) கடல் சார்ந்த பகுதி

A) I– c, II– a, III– b, IV– d

B) I– a, II– d, III– b, IV– c

C) I– b, II– a, III– c, IV– d

D) I– d, II– a, III– b, IV– c

12) தமிழ் மன்னர்கள் மற்றும் அவர்களின் தலைநகரை பொருத்துக

I. சோழர்கள் – a) கேரளா

II. பாண்டியர்கள் – b) காஞ்சிபுரம்

III. சேரர்கள் – c) உறையூர்

IV. பல்லவர்கள் – d) மதுரை

A) I– c, II– d, III– a, IV– b

B) I– a, II– d, III– b, IV– c

C) I– b, II– a, III– c, IV– d

D) I– d, II– a, III– b, IV– c

13) கீழ்க்கண்டவர்களில் கடையெழு வள்ளல்களுள் அல்லாதவர் யார்?

A) பாரி

B) காரி

C) பேகன்

D) நளன்

14) சங்க காலத்தில் அரசன் தலைமையேற்று நடத்தும் நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) சபை

B) நீதிசபா

C) அவை

D) இவை எதுவும் இல்லை

15) பாண்டிய அரசனை புகழ்ந்து எழுதப்பட்ட நூல் கீழ்க்கண்டவற்றுள் எது?

A) அகநானூறு

B) புறநானூறு

C) கலித்தொகை

D) பரிபாடல்

16) பல்வேறு வகையான வரிகளை பற்றி கூறும் சங்க பாடல் எது?

A) புறநானூறு

B) பட்டினப்பாலை

C) கலித்தொகை

D) ஐங்குறுநூறு

17) கீழ்க்காணும் யாருடைய கல்வெட்டில் முத்துக்குளித்தல் பற்றி கூறப்பட்டுள்ளது?

A) சேரர்கள் கால கல்வெட்டு

B) சோழர்கள் கால கல்வெட்டு

C) பாண்டியர் கால கல்வெட்டு

D) பல்லவர்கள் கால கல்வெட்டு

18) சங்க காலத்தில் அடிமைகள் கீழ்க்கண்டவற்றுள் எதற்கு பயன்படுத்தப்பட்டனர்?

I. பரிசுக்காக பரிமாற்றம் செய்ய

II. கட்டுமானம் மற்றும் கட்டிட வேலை செய்ய

III. வர்த்தகங்கள்

A) I, II க்கு மட்டும்

B) II, III க்கு மட்டும்

C) I, III க்கு மட்டும்

D) இவை அனைத்திற்கும்

19) சங்க காலத்திய சமுதாயப் பிரிவுகளை பொருத்துக

I. துடியன் – a) விவசாயி

II. கடம்பன் – b) குடி

III. வைசியன் – c) அரசன்

IV. வேளாளர் – d) வியாபாரி

A) I– b, II– c, III– d, IV– a

B) I– a, II– d, III– b, IV– c

C) I– b, II– a, III– c, IV– d

D) I– d, II– a, III– b, IV– c

20) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. வர்ண முறை மற்றும் சாதி அமைப்பு சங்க கால சமுதாயத்தில் சிறிதளவே காணப்பட்டன.

II. பண்டைய தமிழ் சமூக அமைப்புகளில் மனுதர்மம் மூலமாக சட்டமாக்கப்படவில்லை.

III. ஆரம்பகால ஆரிய பிராமண சாதி அமைப்புகள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படவில்லை.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

21) கீழ்க்காணும் எந்த கடவுளை வழிபடுவதே தமிழ்நாடு பழங்குடியினரின் வழிபாட்டு மரபு ஆகும்?

A) சிவன்

B) முருகன்

C) அய்யனார்

D) விஷ்ணு

22) எந்த நூற்றாண்டுக்கு பிறகு தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற எழுத்துக்கள் தோன்ற ஆரம்பித்தன?

A) கிபி நான்காம் நூற்றாண்டுக்குப் பின்

B) கிபி ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்

C) கிபி ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்

D) கிபி ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்

23) தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டிருந்தது திராவிட சமூகத்தை மேலிருந்து கீழாக சாதிரீதியாக பிரித்தது கீழ்கண்டவற்றுள் எது?

I. சமஸ்கிருதமயமாதல்

II. வேத சடங்குகள்

III. மனு கொண்டுவந்த வர்ணாசிரம அமைப்பு

A) I மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

24) அரசுரிமையானது, புனிதத்தன்மை உடையது மற்றும் மரபுவழியானது என கூறியவர்கள் யார்?

A) சேரர்கள்

B) சோழர்கள்

C) பாண்டியர்கள்

D) பல்லவர்கள்

25) சங்ககாலத்தில் நடைமுறையில் இருந்தவையாக கருதப்படுபவனவற்றில் கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

I. பெண்கள் மிகவும் உயரிய மரியாதையுடன் நடத்தப்பட்டனர் மற்றும் இவர்கள் அரசர்களுக்கு பாதுகாவல் மற்றும் பல்வேறு வகையான பணிகளையும் செய்தனர்.

II. அதிகாரங்கள் அனைத்தும் ஆண்களிடம் மட்டுமே இருந்தது. பெண்கள் பொது அவையில் பங்கேற்கலாம்,

ஆனால் ஆண்களின் நிர்வாகிகளாகவும் மற்றும் ஆட்சியாளர்களாகவும் இருந்தனர்.
III. பெண்கள் சமூக சடங்குகளில் முக்கிய பங்கு வகித்தனர்.
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) இவை அனைத்தும் சரி

26) ஔவையார் என்பதற்கான பொருள் என்ன?
A) அறிவுடைய பெண்
B) மதிப்பிற்குரிய பெண்
C) செல்வமிக்க பெண்
D) அதிகாரமுள்ள பெண்

27) ஔவையார் எனும் பட்டப்பெயர் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?
A) ஆறு
B) ஏழு
C) எட்டு
D) ஒன்பது

28) ஔவையார் கீழ்க்காணும் எந்த நூற்றாண்டை சேர்ந்தவர் ஆவார்?
A) இரண்டாம் நூற்றாண்டு
B) மூன்றாம் நூற்றாண்டு
C) நான்காம் நூற்றாண்டு
D) ஐந்தாம் நூற்றாண்டு

29) கீழ்கண்டவரில் யார் ஔவையாரின் சமகாலத்தவர் ஆவார்?
A) திருவள்ளுவர்
B) கபிலர்
C) இருவரும்
D) இருவரும் அல்ல

30) ஔவையார் கீழ்காணும் எந்த நூலில் தமது பங்களிப்பை அளித்துள்ளார்?
A) குறுந்தொகை
B) அகநானூறு
C) புறநானூறு
D) இவை அனைத்திலும்

31) "உங்களின் ஆயுத கிடங்கில் ஆயுதங்கள் பளபளப்பாகவும் நெய் பூசப்படும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதியமானின் ஆயுதங்கள் உடைந்தும், ரத்தக்கறை படிந்தும் உள்ளன" என ஔவையார் யாரிடம் கூறினார்?
A) தொண்டைமான்
B) செங்குட்டுவன்
C) இரும்போறால் சேறை
D) இவர்கள் யாரும் அல்ல

32) ஆத்திச்சூடி மற்றும் கொன்றை வேந்தன் போன்ற நூல்களை எழுதிய ஔவையார் எந்த நூற்றாண்டை சேர்ந்தவர் ஆவார்?
A) எட்டாம் நூற்றாண்டு
B) ஒன்பதாம் நூற்றாண்டு
C) பத்தாம் நூற்றாண்டு
D) பதினோராம் நூற்றாண்டு

33) அரசியல் சிந்தனையாளர் காண வரையறைகளைகளாக கீழ்க்கண்டவற்றுள் எதனை கூறலாம்?
I. சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள், நிகழ்வுகளுக்கு காரணியாக இருத்தல்
II. சமூகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய அரசியல் முடிவுகளை எடுத்தல்
III. மக்களின் பொதுப்புத்தியில் மாற்றத்தை உருவாக்குதல்
A) I, II மட்டும்
B) I, III மட்டும்
C) II, III மட்டும்
D) இவை அனைத்தையும்

34) கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?
I. அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும், பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன.
II. அடுத்த காலகட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்திற்கான அரசியல் முடிவுகளை அரசியல் சிந்தனையாளர்கள் மேற்கொள்கிறார்கள்.
III. அரசியல் சிந்தனையாளர்களின் அரசியல் முடிவுகள் அனேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்ட கால மாற்றங்களை உருவாக்குகின்றன.
A) I, II மட்டும் சரி
B) I, III மட்டும் சரி
C) II, III மட்டும் சரி
D) இவை அனைத்தும் சரியானது

35) அரசியல் சிந்தனையாளர்களை கீழ்க்கண்டவற்றுள் எவ்வாறு வகைப்படுத்தலாம்?
A) பொதுவுடைமை வாத அரசியல் சிந்தனையாளர்கள்
B) திராவிட பண்பாட்டு அரசியல் சிந்தனையாளர்கள்
C) ஒடுக்கப்பட்ட மக்கள் சிந்தனையாளர்கள்
D) அனைத்தும் சரி

36) திருக்குறளின் பொருட்பாலில் அதிகாரங்களையும், அதன் எண்ணிக்கையையும் பொருத்துக.
I. அரசியல் – a) 17
II. அமைச்சியல் – b) 25
III. நட்பு – c) 13
IV. குடி – d) 10
A) I– b, II– d, III– a, IV– c
B) I– a, II– d, III– b, IV– c
C) I– b, II– a, III– c, IV– d
D) I– d, II– a, III– b, IV– c

37) "படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு "

என்னும் குறளில் அரசின் அங்கம் என குறியிடப்படுவது எது?
I. அமைச்சர்கள், அரண்
II. கூழ், படை
III. நட்பு, குடிமக்கள்
A) I, II ஐ மட்டும்
B) II, III ஐ மட்டும்
C) I, III ஐ மட்டும்
D) இவை அனைத்தையும்

38) பொருட்பாலின் எத்தனை அதிகாரங்களில் அரசனது இயல்பு கூறும் அரசியலை திருவள்ளுவர் கூறுகிறார்?
A) 15 அதிகாரங்களில்
B) 25 அதிகாரங்களில்
C) 35 அதிகாரங்களில்
D) 45 அதிகாரங்களில்

39) அதிகாரம் 39 (இறைமாட்சி) முதல் அதிகாரம்63 (இடுக்கண் அழியாமை) வரையிலான குறள்களில் அரசர், வேந்தர், நிலன் ஆண்டவர், மன்னவர் முதலான பெயர்களால் எத்தனை முறை திருவள்ளுவர் ஆட்சித் தலைவனை சுட்டிக்காட்டுகிறார்?
A) 40 முறை
B) 46 முறை
C) 53 முறை
D) 66 முறை

40) அதிகாரங்களையும் அதன் எண்ணையும் பொருத்துக.
I. கல்வி வேண்டும் – a) அதிகாரம் 44
II. பெரியாரை துணை கொள்ளல் – b) அதிகாரம் 46
III. சிற்றினம் சேராமை – c) அதிகாரம் 40
IV. குற்றம் கடிந்த வாழ்வு வேண்டும் – d) அதிகாரம் 45
A) I– c, II– d, III– b, IV– a
B) I– a, II– d, III– b, IV– c
C) I– b, II– a, III– c, IV– d
D) I– d, II– a, III– b, IV– c

41) அதிகாரங்களையும் அதன் எண்ணையும் பொருத்துக
I. வெருவந்த செய்யாமை – a) அதிகாரம்53
II. ஒற்றாளும் முறை வேண்டும் – b) அதிகாரம்55
III. சுற்றம் தழுவுதல் – c) அதிகாரம்59
IV. செங்கோன்மை வேண்டல் – d) அதிகாரம்57
A) I– d, II– c, III– a, IV– b
B) I– a, II– d, III– b, IV– c
C) I– b, II– a, III– c, IV– d
D) I– d, II– a, III– b, IV– c

42) "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் "
எனும் குறட்பா எந்த அதிகாரத்தில் அமைந்துள்ளது?
A) இறைமாட்சி
B) மெய்யுணர்தல்
C) வலியறிதல்
D) மன்னரை சேர்ந்தொழுதல்

43) "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் "
எனும் குறட்பாவில் திருவள்ளுவர் கூறும் கருத்து யாது?
I. ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையை செய்தால் அவன் இறையென்று வைக்கப்படுவான்.
II. அரச குடும்பத்தில் பிறந்தவர்கள் அனைவரையும், அரசனாக கருதலாம்.
III. இந்த திருக்குறள் முடியாட்சி காலத்திற்கு மட்டுமன்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலகட்டத்திற்கும் பொருந்துகிறது.
A) I, II மட்டும் சரி
B) II, III மட்டும் சரி
C) I, III மட்டும் சரி
D) எல்லாமே சரி

44) "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு"
எனும் குறட்பா எந்த அதிகாரத்தில் அமைந்துள்ளது?
A) வெகுளாமை
B) வெருவந்த செய்யாமை
C) இறைமாட்சி
D) குடியியல்

45) "அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு"
எனும் குறள் உணர்த்தும் செய்தி எது?
A) மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி. நாட்டின் மானமே தன் மானமாக கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும்.
B) நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான்.எனவே அவன் ஒழுக்கமாக இருக்க வேண்டும்.
C) மன்னன் தலைவனாக இருப்பதால் அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனி வாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுகிறது. ஆகவே அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும்.
D) இவை அனைத்தும் சரி

46) "வானோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி "
எனும் குறட்பா எந்த அதிகாரத்தில் அமைந்துள்ளது?
A) செங்கோன்மை
B) கொடுங்கோன்மை
C) குடிமை
D) மன்னரை சேர்ந்தொழுகல்

47) குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளை பொருந்தி நிற்குமாம் உலகம், எனும் பொருள்தரும் குறள் எந்த அதிகாரத்தில் அமைந்துள்ளது?
A) செங்கோன்மை

B) கொடுங்கோன்மை

C) குடிமை

D) மன்னரை சேர்ந்தொழுகல்

48) "அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "
எனும் குறட்பா எந்த அதிகாரத்தில் அமைந்துள்ளது?

A) செங்கோன்மை

B) கொடுங்கோன்மை

C) வெருவந்த செய்யாமை

D) கண்ணோட்டம்

49) "அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை "
எனும் குறளில் ஒரு கொடுமையான மன்னனை வீழ்த்தும் படையாக திருவள்ளுவர் எதை குறிப்பிடுகிறார்?

A) மன்னனின் ஆணவம்

B) குடிமக்களின் கண்ணீர்

C) மன்னனின் செல்வம்

D) எதிரிகளின் ஆற்றல்

50) "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு "
எனும் குறட்பா கீழ்காணும் எந்த அதிகாரத்தில் அமைந்துள்ளது?

A) வெகுளாமை

B) வெருவந்த செய்யாமை

C) இறைமாட்சி

D) குடியியல்

51) "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு "
என்னும் குறட்பாவில் ஒரு மன்னன் எத்தனை வழிமுறைகளில் பணத்தை கையாள வேண்டும் என திருவள்ளுவர் கூறுகிறார்?

A) இரண்டு வழிமுறைகளில்

B) மூன்று வழிமுறைகளில்

C) நான்கு வழிமுறைகளில்

D) ஐந்து வழிமுறைகளில்

52) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது

I. திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில், அறநெறியே முதன்மையான இடத்தினை பெறுகின்றது.

II. திருவள்ளுவரின் அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது.

III. திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சி காலத்திற்கும் ஏற்புடையதாக இல்லை.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

53) திருவள்ளுவர் வாழ்ந்த காலத்திலிருந்த மதம் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. பௌத்தமதம்

II. சீக்கிய மதம்

III. ஜைன மதம்

IV. இந்து மதம்

A) I, II, IV மட்டும்

B) II, III, IV மட்டும்

C) I, III, IV மட்டும்

D) இவை அனைத்தும்

54) "ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே"
என பாடியவர் யார்?

A) கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

B) நாமக்கல் வெ.ராமலிங்கம்

C) சுப்பிரமணிய பாரதியார்

D) பாரதிதாசன்

55) சுப்ரமணிய பாரதியார் பிறந்த ஆண்டு எது?

A) 1880 ஆம் ஆண்டு

B) 1881 ஆம் ஆண்டு

C) 1882 ஆம் ஆண்டு

D) 1883 ஆம் ஆண்டு

56) மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எந்த ஆண்டு சுதேச கீதங்கள் எனப்படும் உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பினை வெளியிட்டார்?

A) 1906 ஆம் ஆண்டு

B) 1907 ஆம் ஆண்டு

C) 1908 ஆம் ஆண்டு

D) 1910 ஆம் ஆண்டு

57) மகாகவி பாரதியார் எந்தப் பத்திரிகையில் துணை ஆசிரியராக தன் பத்திரிக்கை வாழ்க்கையைத் தொடங்கினார்?

A) சுதேசமித்திரன்

B) பால பாரதா

C) இந்தியா

D) சூர்யோதயம்

58) இந்தியா எனப்படும் நாளிதழ் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A) மே மாதம், 1905 ஆம் ஆண்டு

B) மே மாதம், 1906 ஆம் ஆண்டு

C) மே மாதம், 1907 ஆம் ஆண்டு

D) மே மாதம், 1908 ஆம் ஆண்டு

59) தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் தனது வார இதழை, எந்த நிறதாளில் வெளியிட்டார்?

A) சிவப்பு

B) பச்சை

C) மஞ்சள்

D) நீலம்

60) பொருத்துக

I. இந்தியா – a) உள்நாட்டு வார இதழ்

II. விஜயா – b) கேலிச்சித்திரம்

III. பால பாரதா – c) தமிழ் தினசரி

IV. சூர்யோதயம் – d) ஆங்கில மாத இதழ்

A) I– b, II– c, III– d, IV– a

B) I– a, II– d, III– b, IV– c

C) I– b, II– a, III– c, IV– d

D) I– d, II– a, III– b, IV– c

61) சுயராஜ்ஜிய தினம் கொண்டாடுவதற்காக எந்த ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக்கூட்டத்திற்கு பாரதியார் ஏற்பாடு செய்தார்?

A) 1907 ஆம் ஆண்டு

B) 1908 ஆம் ஆண்டு

C) 1909 ஆம் ஆண்டு

D) 1910 ஆம் ஆண்டு

62) கீழ்க்கண்டவர்களில் யாருடைய இயற்பெயர் சுப்பையா என்பதாகும்?

A) நாமக்கல் கவிஞர்

B) திரு வி கல்யாண சுந்தரனார்

C) பாவேந்தர் பாரதிதாசன்

D) சுப்பிரமணிய பாரதியார்

63) சுப்பிரமணிய பாரதியார் எங்கு தங்கி இருந்தபோது முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடை போன்றவற்றை தனக்கே உரிதாக்கிக்கொண்டார்?

A) திருநெல்வேலி

B) புதுச்சேரி

C) காசி

D) புதுடில்லி

64) சுப்பிரமணிய பாரதியார் எந்த ஆண்டு பாண்டிச்சேரிக்குச் சென்றார்?

A) 1907 ஆம் ஆண்டு

B) 1908 ஆம் ஆண்டு

C) 1909 ஆம் ஆண்டு

D) 1910 ஆம் ஆண்டு

65) பாரதியார் எந்த ஆண்டு மகாத்மா காந்தியைச் சந்தித்தார்?

A) 1917 இல்

B) 1918 இல்

C) 1919 இல்

D) 1920 இல்

66) சுப்பிரமணிய பாரதியார் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – 1905 ஆம் ஆண்டு மற்றும்1907 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

கூற்று 2 – சுப்பிரமணிய பாரதியார் வ.உ.சிதம்பரம், சுப்பிரமணிய சிவா, மண்டயம் திருமலாச்சாரியார் மற்றும் சீனுவாச்சாரி போன்றவர்களிடம் நல்லுறவை வளர்த்திருந்தார்.

கூற்று 3 – சுப்பிரமணிய பாரதியார் பாண்டிச்சேரியில் பத்து ஆண்டு காலம் வரை தங்கியிருந்தார்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

67) பாரதியார் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – பாரதியார் சாதி அமைப்புக்கு எதிராக செயல்பட்டார்.

கூற்று 2 – பாரதியார் அட்டவணை சாதியினரையும் பூணூல் அணிய செய்து வேதம் ஓதச் செய்தார்.

கூற்று 3 – சுப்ரமணிய பாரதியார் பட்டியலினத்தவர் கோயிலுக்குள் அனுமதிப்பதை ஆதரித்தார்

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

68) நிவேதிதா என்பவர் கீழ்க்கண்டவர்களில் யாருடைய சீடர் ஆவார்?

A) ராமகிருஷ்ண பரமஹம்சர்

B) விவேகானந்தர்

C) அரவிந்த கோஷ்

D) இவர்கள் யாரும் அல்ல

69) பெண்களுக்கு சக்தி என்ற அடையாளத்தை அளித்தவர் யார்?

A) விவேகானந்தர்

B) சுப்பிரமணிய பாரதியார்

C) வ.உ.. சுப்பிரமணியம்

D) ம. சிங்காரவேலர்

70) பாரதியார் எந்த ஆண்டு இயற்கை எய்தினார்?

A) செப்டம்பர் 11, 1920 இல்

B) செப்டம்பர் 11, 1921 இல்

C) செப்டம்பர் 11, 1922 இல்

D) செப்டம்பர் 11, 1923 இல்

71) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சி பெற்ற சுதேசி மற்றும் தன்னாட்சி இயக்கங்களால் நாடு முழுவதும் விடுதலை உணர்வு பரவியது. இருந்தபோதும் இவை மதவாத தன்மையை கொண்டிருந்தன.

II. இந்த இயக்கங்களில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் படித்த மேல்தட்டு வர்க்கத்தினராக இருந்தனர். அவர்கள் கூறும் விடுதலை மட்டுமே அரசியல் விடுதலையாக இருந்தது

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

72) சென்னை மாகாணத்தில் இருந்த தொழிலாளர் அமைப்புகளுக்கு தலைமை தாங்கியவர்கள் யார்?

I. சுப்பிரமணிய பாரதியார்

II. திரு வி கல்யாண சுந்தரனார்

III. தி.வரதராஜுலு

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

73) தொழிலாளர்களை அரசியல்மயப்படுத்தி விடுதலை இயக்கத்தோடு இணைக்க வேண்டும் என்று இந்திய காங்கிரசுக்கு ம.சிங்காரவேலர் எந்த ஆண்டு தந்தி அனுப்பினார்?

A) 1920 இல்

B) 1921 இல்

C) 1922 இல்

D) 1923 இல்

74) சிங்காரவேலர் எந்த ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் குழுவின் கூட்டத்தில் தமிழக பிரதிநிதியாக கலந்து கொண்டார்?

A) 1920 இல்

B) 1921 இல்

C) 1922 இல்

D) 1923 இல்

75) கீழ்க்கண்டவற்றுள் எது ம.சிங்காரவேலரின்1922ஆம் ஆண்டு, அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய கருத்தாகும்?

I. இந்திய விடுதலை என்பது விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.

II. தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரஸ் பேரியக்கம் போராடவேண்டும்.

III. விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளையும் இணைத்து கொள்ள வேண்டும்.

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

76) எந்த ஆண்டு தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது?

A) 1926 இல்

B) 1927 இல்

C) 1928 இல்

D) 1929 இல்

77) காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேச வேண்டும், அப்போதுதான் விடுதலை கருத்துக்கள் மக்களைச் சென்றடையும் என வலியுறுத்தியவர் யார்?

A) பிபின் சந்திர பால்

B) சிங்காரவேலர்

C) சுப்ரமணிய பாரதியார்

D) மகாத்மா காந்தி

78) காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேச வேண்டும் என்ற தீர்மானம் எந்த ஆண்டு சென்னை மாகாணச் சங்கத்தின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது?

A) 1916 இல்

B) 1917 இல்

C) 1918 இல்

D) 1919 இல்

79) சுயமரியாதை இயக்கத்தினை, சமூக நீதி கட்சி என்று பெயர் மாற்றியவர் யார்?

A) சிங்காரவேலர்

B) ஈ.வெ.ரா பெரியார்

C) மூவலூர் ராமாமிருதம்

D) இவர்கள் யாரும் அல்ல

80) இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினம் எந்த ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது?

A) 1921 முதல்

B) 1922 முதல்

C) 1923 முதல்

D) 1924 முதல்

81) சிங்காரவேலர், தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாக எந்த நாளில் தெரிவித்தார்?

A) மே1, 1921 இல்

B) மே1, 1922 இல்

C) மே1, 1923 இல்

D) மே1, 1924 இல்

82) சிங்காரவேலர் உருவாக்கிய தொழிலாளர் விவசாய கட்சியின், முக்கிய கோரிக்கைகளுள் தவறானது எது?

A) குறைந்தபட்ச ஊதியம் மற்றும்8 மணி நேர வேலை.

B) சங்கம் அமைக்கும் உரிமை

C) சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு

D) ஒப்பந்த முறை கொண்டு வருதல்

83) இந்தியாவின் முதல் பொதுவுடைமை வாதம் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

A) 1924 இல்

B) 1925 இல்

C) 1926 இல்

D) 1927 இல்

84) சிங்காரவேலர் குறித்த கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?.

I. சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து மதத்தில் நிலவும் வறுமை அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார்,

II.1890 களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து, வர்ண அமைப்புக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

III. பெரியார் நடத்திய குடியரசு உள்ளிட்ட இதழ்களில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமான கட்டுரைகளை எழுதினார்.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

85) தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நினைவு கூறப்படுபவர் யார்?

A) ஈவெரா பெரியார்

B) சிங்காரவேலர்

C) தி.வரதராஜுலு

D) திரு வி கல்யாண சுந்தரனார்

86) ஈ.வெ.ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தந்தை பெரியார் எந்த ஆண்டு பிறந்தார்?

A) 1878 இல்

B) 1879 இல்

C) 1880 இல்

D) 1881 இல்

87) 'தேசத்தின் பெயரால் ஒரு குழு மக்களை சுரண்ட நினைத்தால், அத்தேசம் போராடிப் பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல' என்று கூறியவர் யார்?

A) சிங்காரவேலர்

B) தந்தை பெரியார்

C) அறிஞர் அண்ணாதுரை

D) இவர்கள் யாரும் அல்ல

88) பெரியார் எந்த ஆண்டுகளில் பட்டியலினத்தவர் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார்?

A) 1920 களில்

B) 1925 களில்

C) 1930 களில்

D) 1935 களில்

89) நவீன தமிழகத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

A) காமராஜர்

B) பெரியார்

C) சிங்காரவேலர்

D) இவர்கள் யாரும் அல்ல

90) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – இந்தியா ஒரு தேசம் என்று சொல்வதைவிட, திராவிட நாடு ஒரு தேசம், ஆந்திர நாடு ஒரு தேசம், வங்காள நாடு ஒரு தேசம் என்று சொல்வது பொருந்தும், என்று பெரியார் வலியுறுத்துகிறார்.

கூற்று 2 – எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்படக்கூடாது என்பது பெரியாரின் கூற்றாகும்.

கூற்று 3 – தமிழ்நாடு தமிழருக்கே திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறியவர் பெரியார் ஆவார்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி